# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2014.12.30

**தாபனச் சுற்றறிக்கை இலக்கம் : 17/2014**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**29/2014 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையை ஏற்புடைத்தாக்குதல் - விசேட முற்பணம் செலுத்துதல்**

2014.12.29 ஆம் திகதிய 29/2014 ஆம் இலக்க "அரசாங்க அலுவலர்களுக்கு விசேட முற்பணம்" எனும் தலைப்பிலான அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டுக்காக ரூபா 4000/= இற்குக் குறையாத விசேட முற்பணத் தொகையைச் செலுத்துவதற்கான மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புரைகளை பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிவாய் வேண்டிக்கொள்கின்றேன். இந்த முற்பணக் கொடுப்பனவுகள் 2015.01.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2015.02.28 ஆம் திகதி முடிவுறுத்தப்படல் வேண்டும். 2015.02.28 ஆம் திகதிக்குப் பின்னர் இம் முற்பணக் கொடுப்பனவுகள் செலுத்தப்படலாகாது.

தகவலுக்காக மற்றும் உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்காக 29/2014 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்: பேராசிரியர் ஷனிக்கா ஹிரிம்புரேகம
தலைவர்

பிரதிகள்:-

1. செயலாளர், உயர் கல்வி அமைச்சு
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
8. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars)
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள்,உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள் /உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்விநிறுவகங்கள் /வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளர்கள் /சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் /உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்விநிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/6/5/1

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 29/2014

எனது இல: EST-7/LOANS/04/0207
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2014.12.29

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## அரசாங்க அலுவலர்களுக்கு விசேட முற்பணம்

2006.11.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 20/2006 தொடர்பாக தங்களது அவதானம் ஈர்க்கப்படுகின்றது.

02. அச் சுற்றறிக்கையின் 03 பந்தியின் 2006 ஆம் ஆண்டு என்பதற்குப் பதிலாக 2014 ஆம் ஆண்டு என்பதனை பிரதியீடு செய்வதற்கும், 2007 ஆம் ஆண்டு என குறிக்கப்பட்டுள்ள எல்லா இடங்களிலும் 2015 என பிரதியீடு செய்வதற்கு கீழ்ப்பட்டு அச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், 2015 ஆண்டுக்காக ரூ. 4000/- இற்கு குறையாத விசேட முற்பணத் தொகையை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அவ்வாறே அச் சுற்றறிக்கையின் 08 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அறவிடப்பட்ட வட்டியை பற்றுவைக்க வேண்டிய வருமான கணக்கு குறியீட்டு இலக்கமான 20.02.20.02 (வட்டி மற்றும் பிற) இல. 20.02.20.99 என திருத்தப்படும்.

03. இம் முற்பண கொடுப்பனவுகள் 2015.01.01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2015.02.28 ஆந் திகதி முடிவுறுத்தப்பட வேண்டியுள்ளதுடன், 2015.02.28 ஆந் திகதிக்குப் பின்னர் இம் முற்பண கொடுப்பனவுகள் செலுத்தப்படலாகாது.

04. இச் சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்பட்டது.

ஒப்பம்/ பி. பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு